

# கல்வியை டிஜிற்றல் முறைமைக்கு மாற்றுவதற்கான கொள்கை

DRAFT

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

ICTA
ideas actioned

2022 ஏப்ரல் 07

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 03 |
| 2. | கொள்கை நோக்கங்கள் | 05 |
| 3. | நோக்கங்கள் | 10 |
| | 3.1 நோக்கம் 1: கல்வியில் டிஜிற்றல் நிலைமாற்றம் | 10 |
| | 3.2 நோக்கம் 2: எதிர்கால சவால்களுக்கான தயார்படுத்தல்கள் | 13 |
| | 3.3 நோக்கம் 3: அனைவருக்குமான டிஜிற்றல் கல்வி “கைகளில்” | 16 |
| | 3.4 நோக்கம் 4: தொழில்துறைக்கு ஏற்ப வைத்திருத்தல் | 17 |
| | 3.5 நோக்கம் 5: மாணவர்களுக்கான டிஜிற்றல் சுற்றுப்புறச் சூழல் | 19 |
| | 3.6 நோக்கம் 6: டிஜிற்றல் கல்விக்கான தகவல் தொடர்பாடல் கற்றல் மூலவளங்கள் | 21 |
| | 3.7 நோக்கம் 7: கற்றல் முகாமைத்துவ முறைகள் | 23 |
| | 3.8 நோக்கம் 8: சுய கற்றலினை அங்கீகரித்தலும் வசதிப்படுத்தலும் | 24 |
| | 3.9 நோக்கம் 9: மென் திறன் விருத்தி | 25 |
| | 3.10 நோக்கம் 10: கல்வி நிறுவனங்களுக்கான டிஜிற்றல் முகாமைத்துவ தகவல் முறைமைகள் | 26 |
| | 3.11 நோக்கம் 11: நிருவாக பதவியினரின் டிஜிற்றல் திறன்கள் | 27 |
| | 3.12 நோக்கம் 12: இணையவழி கற்றல் | 28 |
| | 3.13 நோக்கம் 13: டிஜிற்றல் கருவிகளினைக் கையாளும் திறன் (ஆசிரியர்கள் கல்வியாளர்கள்) | 33 |
| | 3.14 நோக்கம் 14: டிஜிற்றல் கருவிகளினைக் கையாளும் திறன் (மாணவர்கள்) | 34 |
| | 3.15 நோக்கம் 15: டிஜிற்றல் இடைவெளி பாதுகாப்பு | 34 |
| | 3.16 நோக்கம் 16: பெற்றோர் / பாதுகாவலருக்கு அறியத்தருதல் | 36 |
| | 3.17 நோக்கம் 17: நிலையான டிஜிற்றல் மயமாக்கல் | 37 |
| | 3.18 நோக்கம் 18: மென்பொருள் பயன்பாடு | 38 |
| | 3.19 நோக்கம் 19: நிலைமாற்ற முயற்சிக்கான முன்னுரிமை | 39 |


DRAFT

# 1.0 அறிமுகம்

விரைவாக மாறி வருகின்றதும், ஒன்றோடொன்று இணைந்து காணப்படுகின்றதுமான சூழலொன்றில், 21 ஆம் நூற்றாண்டில், சமூக மற்றும் தொழில்சார் யதார்த்தங்களைக் கையாளும் வகையில் மாணவர்களுக்கு போதியளவு ஆற்றல்களை வழங்குவதற்காக கல்வி முறைமைகளுக்குள் அவர்களை பாடசாலை தொழிலில் அல்லது அதனிலும் உயர்வானதொன்றில் அமர்த்துவது இன்றியமையாததாகும். அவர்கள், வலுவானவர்களாகவும் அதேநேரத்தில் நெகிழ்வுத் தன்மையுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். தகவலின் தொன்மையானது, அறிவினை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், சிக்கலான சவால்களை எடுக்கக்கூடிய, மாறி வருகின்ற கேள்விகளுக்குப் பொருத்தமான நெகிழ்வுத் தன்மையுள்ள ஆற்றல் தொகுதிகளைப் பின்பற்றக்கூடிய மனித மூலதனத்தைக் கொண்டிருப்பதற்கு தேவைப்படுத்துகின்றதாகையால், அவற்றை வழங்குவதற்குப் போதுமான வலுவினை கல்வி முறைமைகள் கொண்டிருத்தல் வேண்டும். அந்தத் தேவையை நிறைவேற்றுவதற்கு வழங்கல் பக்கத்திலிருந்து ஆசிரியர்கள் மற்றும் நிருவாகிகளுக்கு உரிய சாதனங்கள் வழங்கப்பட வேண்டியதும் அதேயளவு அத்தியவசியமானதாகும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான முக்கிய தகுதிகளைப் பெற்றுக் கொள்வதில் சிறந்த தரமும், சமத்துவமான கல்வியும் முக்கியமான பகுதியொன்றாகும் ஆகையால், இங்கு கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கொள்கையை நடைமுறைப்படுத்து பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை.

குறிப்பாக, கோவிட்-19 இற்குப் பின்னரான காலப்பகுதியில் நாம் பார்த்ததைப் போல, பாரம்பரிய கல்வி முறைமைகள், மாறி வருகின்ற கற்றலின் தன்மையைக் கையாள்வதற்கு சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கவில்லை. கற்பவர்கள் மற்றும் அவர்களின் ஆற்றல்கள் தொடர்பில் மாறிவருகின்ற கேள்விகள் மற்றும் கற்பிப்பதிலும், சிக்கல்களை கையாள்வதிலும் புதிய வழிகளின் தேவை ஆகியவை புதிய சிந்தனையால் மட்டுமே கையாளப்படக்கூடியவை யாகும். இது 21 ஆம் நூற்றாண்டின் திறன்களின் விருத்தியை வளர்க்கக்கூடிய புதுமையான கற்றல் சூழல்களை ஏற்படுத்துவதை உறுதி செய்வதில் கவனம் செலுத்தகின்ற கல்விக் கொள்கை சீர்திருத்தமொன்றுக்கு அழைப்பு விடுக்கின்றது. கல்விப் புத்துருவாக்கமானது, அதாவது 'கல்வி செயல்முறைக்கு மதிப்பைச் சேர்ப்பதற்கும், அக்கறைதாரரின் திருப்தி அல்லது கல்விசார் செயலாற்றுகை நியதிகளில் காணப்பட்டு அளவிடத்தக்க பெறுபேறுகளை ஏற்படுத்துவதற்கும் உத்தேசிக்கப் பட்டுள்ள எந்தவொரு மாறும் மாற்றமும்' மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தேவைகளுக்கு பொருந்தும் அர்த்தமுள்ள கல்வி சூழல்களை உருவாக்குவதனைத் தேவைப்படுத்துகின்றது.

எமது விருப்பப்பட்டியல் பரந்துபட்டதாக காணப்படுகின்ற அதேவேளையில், எதிர்பார்ப்புகளை வழங்குவதற்கான தற்போதைய முறைமைகளுக்கான ஆற்றல் கேள்விக்குரியதாகும். எதிர்பாராத மற்றும் முன்னெப்போதுமில்லாத தொற்றுநோய் நிலைமையானது, பாரம்பரிய கல்வி முறையில் உள்ள பலவீனங்களை பார்வைக்கு கொண்டு வந்துள்ளது. கோவிட்-19- இற்குப் பின்னரான இணைய கற்றல், அதன் சமமான அணுகல் பற்றாக்குறை காரணமாக தீவிரமாக விமர்சிக்கப்பட்டுள்ளது. தற்போது, முடக்க காலப்பகுதியில் ஒரு இணையத்துடன் இணைக்கப்பட்ட சாதனமொன்றில்லாது மாணவர் ஒருவருக்கு நடைமுறையில் சாத்தியமான மாற்றுத் தீர்வொன்றில்லை. இணைய செயலமர்வுகளை அணுகுகின்ற சாதனமொன்றில்லை என்று கணிசமான மாணவர்கள் பிரிவுகள் தெரிவிக்கின்ற போது கல்விசார் நிறுவனங்கள் சிரமத்தை சந்தித்துள்ளன.

DRAFT

விவாதம் என்னவெனில், நிதி நிலைமையில் பின்தங்கிய பின்னணியிலிருந்து வருகின்ற மாணவர்கள் சிறந்த இணைய அணுகல் இல்லை என்றால் கற்க முடியாது என்ற அர்த்தத்தில் பின்தள்ளப்படுகின்றார்களா? என்பதாகும். 2021 ஆம் ஆண்டு நடுப்பகுதியில், ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை மாணவர்களில் 60% ஆனோருக்கு மட்டுமே இணையக் கல்வியை அணுகமுடியும் என்று ஊகிக்கப்பட்டிருந்தது.

இணையவழிக் கற்றல் என்பது பிறிதொரு கல்வி முறையாகும். இது, தனியார் நலனுடன் கூடிய கல்வியுடன் இணைந்துள்ள பாரிய பிரச்சினைகளிலிருந்து விடுபட முடியாது, பலர் இதனை பொது நலனொன்றாகவிருப்பதற்கு விரும்புகையில் அது அவ்வாறு நடப்பதில்லை. அது போட்டி; தனிநபர் ஒருவரின் நுகர்வு மற்றொரு நபர் அணுகுவதைத் தடுக்கின்றது. இது விலக்கக்கூடியதும் கூட; கல்விக்கு விலையொன்று உள்ளதுடன், இது எல்லையற்ற உற்பத்தியை கட்டுப்படுத்துகின்றது. இலவசக் கல்வியானது, மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவொன்றுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், கட்டணம் இல்லாமல் கல்வியைப் பெற்றுக்கொள்ளச் செய்கின்றது. ஆனால், இணைப்பு செலவுகள் மற்றும் இறுதி சாதனத்தின் பயன்பாட்டுச் செலவினை பெற்றோர்கள் ஏற்க வேண்டியிருக்கின்ற இணையவழிக் கல்வியில் இப்போது அந்த வாய்ப்பு கிடைப்பதில்லை.

இந்தப் பின்னணியில், கல்வி அமைச்சானது, கல்வி நிருவாகிகள், தொழில் வல்லுநர்கள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை ஆசிரியர்கள், தொழிற் பயிற்சி நிறுவகங்களின் தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் உயர் கல்வி அலுவலர்கள், கைத்தொழில் நிபுணர்கள் போன்றவர்களின் பங்கேற்புடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையுடன் இணைந்து நடாத்தப்பட்ட மூன்று பயிற்சி செயலமர்வுகளின் பெறுபேறுகளான கொள்கை முன்மொழிவுகள் இங்குள்ளன. இவர்கள் பின்வரும் நிறுவனங்களால் எதிர்கொள்ளப்பட்ட தற்போதைய பிரச்சினைகள் பற்றி கலந்தாலோசித்துள்ளனர்:

- கல்வி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவகங்கள்
- பாடசலைகள்
- பல்கலைக்கழகங்கள்
- தொழிற் பயிற்சி நிறுவகங்கள்

பின்வரும் இந்த வெளியீடு, கல்வி அமைச்சுடன் இணைந்து தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையால் தொகுக்கப்பட்டு, பொழிப்பாக்கி, இந்த அக்கறைதாரர்கள் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட கொள்கைத் தீர்வுகளின் தொகுப்பொன்றாகும்.

DRAFT

## 2.0 கொள்கை நோக்கங்கள்




கல்வியை டிஜிற்றல் முறைமைக்கு மாற்றுவதற்கான கொள்கையொன்றினை அறிமுகப்படுத்துவதன் ஒட்டுமொத்தக் குறிக்கோள்களாக பின்வருவன அடையாளங் காணப்பட்டுள்ளன.

1. **கல்வியை டிஜிற்றலுக்கு மாற்றுதல் :** கல்வியானது, அது ஆரம்ப, இரண்டாம் அல்லது மூன்றாம் நிலைகளாகவிருந்து, சீர்குலைந்திருக்கின்றது. ஆனால், அதே நேரத்தில், டிஜிட்டல் மாற்றத்திலிருந்தான அனுகூலங்கள், புதிய தொழில்நுட்பங்கள், போக்குகள் மற்றும் பிரயோகங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி உயர் அபிவிருத்திகளுடன் இசைவாகவும், மாற்றங்களுடனும் கல்வி வைக்கப்படுதல்.
2. **எதிர்கால சவால்களுக்கான தயார்படுத்தல்கள்:** மாணவர்கள், சமகால தொழில் சந்தை சவால்களை உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் எதிர்கொள்வதற்கு அவர்களைப் பயிற்றுவிக்கின்ற புதுப்பிக்கப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட கல்வியைப் பெறுதல். அவர்கள், உலகின் எந்த பகுதியிலிருந்து வருகின்ற மாணவர்களிலும் பார்க்க அல்லது அவர்களுக்கு நிகராக தேவையான டிஜிற்றல் திறன்களை எப்போதும் கொண்டிருத்தல்.
3. **அனைவருக்குமான டிஜிற்றல் கல்வி**: ஒவ்வொரு மாணவரும், அவர் பின்பற்றும் கற்றல் துறையினைப் பொருட்படுத்தாது, பாடத்திட்டத்திற்குள் அதன் முக்கிய பகுதியாக டிஜிற்றல் திறன்களை விருத்தி செய்வதற்கான வாய்ப்பினை கொண்டிருக்கின்றனர். டிஜிற்றல் திறன் பயிற்சிப் பகுதியானது, பாடத்திட்டத்திற்கு மேலதிகமாக அல்லது இணைப்புப் பகுதியொன்றாக இருக்க வேண்டிய தேவையில்லை. கற்கைநெறியின் வகையைப் பொறுத்து, எப்போதும் பாடத்திட்டத்திற்குள் மாணவர்கள் டிஜிற்றல் திறன்களை உருவாக்குவதற்கு காலத்தின் 10% இற்கும் அதிகமாக ஒதுக்கப்படுதல்.

4. **தொழிற்றுறைக்கு ஏற்ப வைத்திருத்தல்:** ஒவ்வொரு பாடசாலையிலும், பல்கலைக் கழகத்திலும் மற்றும் நிறுவகத்திலும் உள்ள கற்பிக்கின்ற / கல்விசார் பதவியினர், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் தொடர்பான பாடங்களை கற்பிப்பதில் தொழில்சார் தகுதியுள்ளவர்களாகவும் மற்றும் அனுபவமுள்ளவர்களாகவும் இருத்தல்; அவர்கள், புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகள், தொழிற்றுறைப் போக்குகள் மற்றும் மாணவர்கள் முழுமையான, மேம்படுத்தப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்படுகின்ற கல்வி யொன்றினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கல்விச் செயற்பாட்டில் அவர்களின் கற்பித்தல் முறைகளை கூட்டுணைப்பதற்கு அவற்றை அடிக்கடி மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு ஏற்ப வைத்திருத்தல்.
5. **மாணவர்களுக்கான டிஜிற்றல் சூழல் :** ஒவ்வொரு பாடசாலையும், பல்கலைக்கழகமும், உயர் கல்வி நிறுவனமும், தொழிற்பயிற்சி நிறுவனமும் டிஜிற்றல் கல்வியை மையமாகக் கொண்ட மாணவர்ளுக்கு உகந்ததாக இருக்கக்கூடிய பொருத்தமான சூழலைக் கொண்டுள்ளன; அவை மாணவர்களுக்கு போதுமான, சமமான வாய்ப்புகளை வழங்கி அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் வகையில் கணினி ஆய்வுகூடங்களில் முழுமையாக உபகரண மயப்படுத்தப்பட்டிருத்தல்.

6. **டிஜிற்றல் கல்விக்கான மூலவளங்கள்:** மாணவர்கள், ஆரம்ப, இரண்டாம் அல்லது மூன்றாம் நிலைகளில் இருந்து, அவர்களின் கற்றலுக்குத் தேவை யான வளங்களை (புத்தகங்கள், பத்திரிகைகள், வீடியோக்கள் போன்றவை) மலிவு விலையில் கண்டறியப்படுதல். இந்த வளங்கள் உயர் தரத்திலானவையும். இற்றைப்படுத்தப்பட்டவையாகவும் இருத்தல்.

7. **கற்றல் முகாமைத்துவ முறைமைகள்:** ஒவ்வொரு பாடசாலையும், பல்கலைக் கழகமும், உயர் கல்வி நிறுவனமும், தொழிற்பயிற்சி நிறுவனமும் கற்றல் செயன்முறையில் கற்றல் முகாமைத்துவ முறைமைகளை சிறந்தளவில் பயன்படுத்துதல்.

8. **சுயமாக கற்றல்:** டிஜிற்றல் கல்வியானது வகுப்பறைகளுக்குள் கட்டுப் படுத்தப்பட முடியாதது என்பதுடன் கட்டுப்படுத்தக் கூடாதது, ஆனால் மாணவர்கள், எதிர்காலத்தில் தகுதிவாய்ந்த டிஜிற்றல் தெழில்சார்நி புணர்களாக விளங்குவதற்கு முக்கிய பாடங்களில், அதேபோன்று ஏனைய தொடர்புடைய பாட விடயப்பரப்பில் அவர்களது அறிவை மேம்படுத்து வதற்கு தமது சுயமாக கற்றலை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கப்படுதல்.
9. **மென் திறன்கள் விருத்தி :** டிஜிற்றல் கல்வியில் எப்போதும் வன் திறன்கள், மென் திறன்கள் (மொழி, தனிப்பட்ட வளங்களும் சந்தைப்படுத்தலும், பேச்சுவார்த்தை, முன்னளிக்கை போன்ற விடயப்பரப்பினை உள்ளடக்கிய ஆனால் அதற்குள் மட்டுப்படுத்தப்படாதவை) ஒன்றோடொன்று இணைந்து செல்கின்ற முக்கிய பகுதியொன்று, மாணவர்களின் டிஜிற்றல் கல்வி செயன்முறையின் போது அவர்களிடையே உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டு, பதியச் செய்தல்.

10. **தகவல் முறைமைகளின் முகாமைத்துவம்:** முழுமையாக உறுதியளிக் கப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமைகள் கையால் பணிகளை நடத்துவதற்கு பதிலாக ஒவ்வொரு பாடசாலையினதும், பல்கலைக்கழகத்தினதும், உயர் கல்வி நிறுவனத்தினதும் மற்றும் தொழிற்கல்வி நிறுவகத்தினதும் நிருவாகத்திற்கு பயன்படுத்துதல்.

DRAFT

11. **டிஜிற்றல் நிருவாகத் திறன்கள்:** ஒவ்வொரு பாடசாலையினதும், பல்கலைக் கழகத்தினதும், உயர் கல்வி நிறுவனத்தினதும் மற்றும் தொழிற்கல்வி நிறுவகத்தினதும் நிருவாகிகள், தங்கள் அன்றாட செயற்பாடுகளைக் கையாளவேண்டிய முறைமைகள் மற்றும் பிரயோகத்தினைக் கையாள்வதற்குத் தேவையான டிஜிற்றல் திறன்களை கற்றுணர்தல்.

12. **இணைய வழி கற்றல் :** மாணவர்கள் வழக்கமான முறையில் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்து தடுக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், டிஜிற்றல் கல்வி முறைமைகள் அவர்கள் தவறவிடுகின்ற கற்றல் செயற்பாடுகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்ட சிறந்ததாக; அவர்களது புவியியல் ரீதியான இருப்பிடங்கள், அவர்களது குடும்பங்களின் சமூக-பொருளாதார நிலைமைகள் போன்றவற்றைப் பொருட்படுத்தாது, அரசாங்கம், 'இலவசக் கல்வி' என்ற உண்மையான உணர்வுடன், தொடர்ச்சியான மற்றும் வழக்கமான கல்வியைக் கொண்டிருப்பதற்கு, அவர்களின் பின்னணியைப் பொருட்படுத்தாது பாரம்பரிய வகுப்பறை கல்விக்கு முடிந்தவரை நெருங்கியதாக மாணவர்களுக்குக் கிடைக்கப் பெறச் செய்து, உட்கட்டமைப்பு வசதிகளை (சாதனங்கள், இணைப்புகள் போன்றவை) இயலுமானவரையில் வழங்குதல்.

13. **ஆசிரியர்களின் திறன்கள்:** பயிற்றுநர்கள் மற்றும் கற்பித்தல் உதவியாளர்கள் உள்ளடங்கலாக கற்பித்தல் / கல்விசார் பதவியினர், அவர்கள் கற்பிக்கும் கருவிகளாக பயன்படுத்தும் டிஜிற்றல் தொழில்நுட்பங்கள் மற்றும் முறைமைகளுடன் முழுமையாக கற்றுணர்தல் வேண்டும். அத்துடன், கற்பித்தல் நோக்கங்களுக்காக, வன்பொருள் அல்லது மென்பொருளாக அவை இருந்து மேலும் அவர்கள் முழுமையாக தேவையான டிஜிற்றல் கருவிகள் மற்றும் பிரயோகங்கள் அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல்.

14. **மாணவர்களின் திறன்கள்:** அனைத்து மாணவர்களும் தமது தொலைதூரக்கல்வி நோக்கங்களுக்காக டிஜிற்றல் கருவிகளைக் கையாள்வதில் தகுதிவாய்ந்தவர்களாக இருத்தல்.

15. **டிஜிற்றல் வெளியில் பாதுகாப்பு:** ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகளின் பாதிப்புகளை புரிந்து கொள்வதன் மூலம் டிஜிற்றல் வெளியில் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுதல்; அவர்களுக்கு தேவையான பாதுகாப்புகள் வழங்கப்படுதல்.

16. **தகவலறியப் பெற்ற பெற்றோர்:** பெற்றோர்கள் டிஜிற்றல் கல்விக்கான தேவைகளை நன்கு அறிந்து, வீட்டில் உகந்த சூழலொன்றை உருவாக்குதல்; இவர்கள் படிப்பில் சிறப்பாக விளங்குவதற்கு பிள்ளைகளை ஆதரவளித்தல்.

17. **நிலையான டிஜிற்றல் மயமாக்கல்**: ஒவ்வொரு பாடசாலையிலும், பல்கலைக்கழகத்திலும், உயர் கல்வி நிறுவனத்திலும் மற்றும் தொழிற்கல்வி நிறுவகத்திலும் உள்ள மிஜிற்ரல் மயமாக்கல்

DRAFT

செயன்முறை நிலையானதாகவும், சூழலுக்கு இசைவானதாகவும் இருத்தல்; இ-கழிவு முறையாக முகாமை செய்யப்படுதல்.

18. **மென்பொருள் பயன்பாடு:** ஒவ்வொரு பாடசாலையிலும், பல்கலைக்கழகத் திலும், உயர் கல்வி நிறுவகத்திலும் மற்றும் தொழில் பயிற்சி நிறுவகத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ள மென்பொருள், கற்றல் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் ஆகிய இரண்டும் பயன்படுத்து வதற்கு பயனுள்ளதாகவும், தொடர்புடையதாவும், இற்றைப்படுத்தப்பட்ட தாகவும், உரிமம் பெற்றுள்ள தாகவும் இருத்தல். (திறந்த மூலப் பொருட்கள் இருந்தாலன்றி)

19. **நிலைமாற்ற முயற்சிக்கான முன்னுரிமை:** கல்வியை டிஜிற்றல் முறைமைக்கு மாற்றுகின்ற முயற்சியானது, தீர்மானம் எடுக்கின்ற செயல்முறையில் அது மிகவும் தகுதியானது என்று முதன்மை பெறுகின்றது; கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கொள்கையை நடைமுறைப் படுத்துபவர்கள் உள்ளடங்கலாக அனைத்து அதிகாரிகளும், அக்கறைதாரர்களும் கல்வியை டிஜிற்றல் மயப்படுத்தும் குறிக்கோள்களை அடைவதனை நோக்கிய அவர்களது பங்களிப்பினை தமது பிரதான கடமையாக கருதுதல் .

DRAFT

# 3.0. நோக்கங்கள்

## 3.1. நோக்கம் 1: கல்வியில் டிஜிற்றல் நிலைமாற்றம்

கல்வியானது, அது ஆரம்ப, இரண்டாம் அல்லது மூன்றாம் நிலையாகவிருந்து, சீர்குலைந்திருக்கின்றது. ஆனால், அதே நேரத்தில், டிஜிற்றல் மாற்றத்திலிருந்தான அனுகூலங்கள், புதிய தொழில்நுட்பங்கள், போக்குகள் மற்றும் பிரயோகங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி உயர் அபிவிருத்திகளுடன் இசைவாகவும், மாற்றங்களுடனும் கல்வி வைக்கப்படுதல்.

**கொள்கை விடயம் 1.1:** அரசாங்கத்தின் தேசிய கொள்கைக் கட்டமைப்பான "சபீட்சத்தின் நோக்கு" அரசு, பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் முழுமையான டிஜிற்றல் மாற்றத்திற்கு நாட்டை வழிநடத்துகின்றது. கல்வியானது, இந்த மாற்றத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்து, கல்வி அமைச்சும், மற்றும் அனைத்து பாடசலைகள், பல்கலைக்கழகங்கள், நிறுவகங்கள் மற்றும் ஏனைய கல்வி அமைப்புகள் இந்த மாற்றத்தை ஊக்குவிக்கின்ற பிற அரசாங்க முகவராண்மைகளுடன் பயனுள்ள உறவுகளை உருவாக்கி, இந்த மாற்றத்தின் பகுதியொன்றாக இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானதாகும்.

**கொள்கை 1.1:** கல்வி அமைச்சும், அனைத்து பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், நிறகைங்கள் மற்றும் ஏனைய கல்வி அமைப்புகள் டிஜிற்றல் மாற்றத்தின் தேவையை இனங்கண்டு, அதிகளவில் அதன் பகுதியொன்றாக இருத்தல்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. கல்வி அமைச்சும், அனைத்து அரச கல்வி அமைப்புகளும் டிஜிற்றல் மாற்றத்திற்கான உபாய மட்டத்திலான தேவையை இனங்கண்டு, அவற்றை அவர்களது உபாய மற்றும் செயல் திட்டங்களில் இணைத்துக் கொள்ளுதல்.
2. கல்வித் துறையினை டிஜிற்றல் முறைமைக்கு மாற்றம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப அமைச்சு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை மற்றும் ஏனைய தொடர்புடைய தாபனங்களுடன் (உ.ம். இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு) நெருங்கிய தொடர்புகளைப் பேணுதல்.

DRAFT

**கொள்கை விடயம் 1.2:** மாற்றத்தினை எதிர்ப்பது என்பது மனித இயல்பு. டிஜிட்டல் மாற்றம் என்பது ஒருவரின் ஏற்கனவே அடையப்பட்ட திறன்களை காலாவதியானதாக ஆக்குகின்றது என்ற கருத்து இருக்கின்றபோது, இது மிகவும் முக்கியமானதாகின்றது. பலர் அவர்கள் எடுப்பதற்குத் தயாராக இல்லாத சவாலொன்றாகப் பார்க்கக்கூடிய தொழில் வளர்ச்சிக்கு புதிய திறன்களைக் கற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது. பதில் என்பது சில நேரடியாக, சில மறைமுகாக வெவ்வேறு வழிகளில் தோன்றக்கூடிய எதிர்ப்பாக இருக்க முடியும்.

**கொள்கை 1.2:** டிஜிற்றல் மாற்றத்திற்கான எதிர்ப்பு பல்வேறு அக்கறைதாரர்களின் கடுமையான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளிலும் பார்க்க அவர்களின் உண்மையான பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, அவற்றுக்கு நடைமுறையில் தீர்வுகளை வழங்கி இராஜதந்திர ரீதியில் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

கல்வியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பெற்றோர்களால் டிஜிற்றல் மாற்றத்திற்குரிய எதிர்ப்பினை பின்வருவன மூலம் தெரியப்படுத்தப்படுதல் வேண்டும் :

1. கல்வி மற்றும் நிருவாக டிஜிற்றல் திறன்களை மையமாகக் கொண்டு வருடாந்த மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்;
2. டிஜிற்றல் தீர்வுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல் மற்றும் ஆசிரியர்களுக்கு வாய்ப்புகளை வழங்குதல் (பதவி உயர்வு, பயிற்சி போன்றவை) அத்துடன்,
3. மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் மீது கவனம் செலுத்தும் விழிப்புணர்வு பிரச்சாரங்களை ஆரம்பித்தல் மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளை மாற்றுதல்.

**கொள்கை விடயம் 1.3:** கொள்கை வகுப்பாளர்கள் முக்கியமாக கல்வியின் டிஜிற்றல் முறைமை மாற்றத்தினை ஏற்றுக்கொண்ட போதிலும், அதனை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகளுக்கான நிதி பற்றிய கேள்விகள் இருக்கலாம்.

**கொள்கை 1.3:** அனைத்து கல்வி நிறுவனங்களிலும் மாணவர்களை மையமாகக் கொண்ட அத்தியாவசியமான டிஜிற்றல் கல்வித் தீர்வுகளை நடைமுறைப்படுத்து வதில் நிதிப் பற்றாக்குறை ஒரு தடையாக இருத்தலாகாது.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1 அனைத்து கல்வி நிறுவனங்களிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சூழலை மேம்படுத்துவதற்கான ஒதுக்கீடுகளை உள்ளடக்குகின்ற தேசிய கல்வி வரவு செலவுத் திட்டத்தினூடாக நிதிப் பிரச்சினையையை வெளிப்படுத்துதல்.

2 சுய ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சமூக தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வியை சமூகத்திற்கு வழங்குவதனை பாடசாலைக்கு மாற்றுதல், அவற்றில் சிலவேனும் இலாபமீட்டும் நிலையங்களாக விளங்குதல்.

3 டிஜிற்றல் தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தனிநபர் நிறுவனங்களில் உள்ள நிதிப்பற்றாக்குறைக்காக, இணையத் தளங்களுக்கான வெள்ளை பட்டியலிடப்பட்ட கொள்கையை நடைமுறைப்படுத்துதல், e-thaksalava, meet.gov.lk போன்ற உள்நாட்டில் உருவாக்கப்பட்ட வற்றை மேம்படுத்துதல். பல்கலைக்கழகங்கள் பல்கலைக்கழக வணிக இணைப்பு (யு.பி.எல்) மூலம் தொழிற்றுறைகளுடன் இணைய வேண்டும் அல்லது பிற சாத்தியக்கூறுகளை ஆராய்தல் வேண்டும்.

DRAFT

## 3.2. நோக்கம் 2: எதிர்கால சவால்களுக்கான தயார்ப்படுத்தல்கள்

உள்நாட்டிலும், சர்வதேசரீதியிலும் சமகால தொழில் சந்தை சவால்களை எதிர்கொள்வதற்கு மாணவர்கள் பெறுகின்ற புதுப்பிக்கப்பட்ட மற்றும் மேம்படுத் தப்பட்ட கல்வி அவர்களுக்கு பயிற்சியளிக்கின்றது; அவர்கள் எப்போதும் உலகின் எந்த பகுதியிலிருந்து வருகின்ற மாணவர்களிலும் பார்க்க அல்லது சமமாக தேவையான டிஜிற்றல் திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.

**கொள்கை விடயம் 2.1:** தொழிற்றுறைகளில் கணிசமான மாற்றங்களின் விளைவாக, உள்நாட்டு மற்றும் சர்வதேச வேலைச் சந்தைகளின் கேள்விகள் அடிக்கடி மற்றும் தொடர்ச்சியான மாற்றத்திற்கு உள்ளாகின்றன. மாணவர்களால் பெற்றுக் கொள்ள வேண்டிய பயிற்சி தொழிற்றுறையின் தேவைக்கு ஏற்ப இருத்தல் வேண்டும், அவ்வாறில்லையெனில், அவர்கள் தொழில்தருநர்களின் கவனத்தை பெறுவது சிரமமாக இருக்கும். மென் மற்றும் வன் திறன்கள் இரண்டிற்கும், தொழில்நுட்பங்கள் மற்றும் தொடர்ந்து கற்றுக்கொள்வதற்கான விருப்பம் மற்றும் வேலையை நோக்கிய நேர்மறை அணுகுமுறை போன்ற பண்புகளில் நேரடி அனுபவம் ஆகியவற்றினை சந்தை கோருகின்றது. கல்விச்செயல்முறையில் அதனை வழங்குவது கல்வி அதிகாரிகளின் சவாலாகும்.

**கொள்கை 2.1:** டிஜிற்றல் கல்வி எப்போதும் உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழில் சந்தைகளின் தற்போது மற்றும் எதிர்காலத்தில் தொழிற்றுறை விரும்பியுள்ள ஆற்றல்களுக்கு ஏற்ப இருத்தல் வேண்டும் .

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. புதிய கற்கைநெறிகள், பாடத் தொகுதிகள் போன்றவற்றை வடிவமைக்கின்ற செயல்முறையில், அனைத்து கல்வி நிறுவனங்களும் அவற்றை முன்னேற்றவும், இற்றைப்படுத்தவும், தொழிற்றுறை சவால்களுக்கு ஏற்பவும் முயற்சிகளை எடுத்தல்.
2. அனைத்து கல்வி நிறுவனங்களும், தொழிற்றுறைத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, அவற்றின் பாடத்திட்டத்தை தொடர்ந்து மீளாய்வு செய்தல்.
3. உள்நாட்டில் அதனைப் பின்பற்றும் வகையில் அனைத்து கல்வி நிறுவனங்களும், சர்வதேச பல்கலைக்கழகங்கள், நிறுவகங்கள் மற்றும் பாடசாலைகள் ஆகியவற்றால் பாடத் தொகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற விருத்தியை தொடர்ந்தேர்ச்சியாக ஆய்வுசெய்தல்.
4. பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்கள் தொழிற்றுறைப் போக்குகள் பற்றி அறிவதற்கு தொழிற்றுறைப் பங்குதாரர்களுடன் வழக்கமான கலந்துரையாடல்களை

DRAFT

நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

5. அனைத்து கல்வி நிறுவனங்களும், பதவியினருக்குத் தேவையான தொழில் பற்றிய வெளிப்பாட்டை வழங்குவதற்காக. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் பயிற்சிகளுக்கு தங்களின் பதவியினரை அனுப்புதல்.

**கொள்கை விடயம் 2.2:** டிஜிற்றல் கல்வி, உண்மையில், நிலையான மாற்றத்தில் இருத்தல் வேண்டும். இது புதிய வளர்ச்சிப் போக்குகளை பாடவிதானத்தில் அனுமதிக்கின்றது. எவ்வாறிருப்பினும், உண்மையில், இந்தச் செயன்முறையில் இடைவெளிகள் உள்ளன என்பது அடிக்கடி கவனிக்கப்படுகின்றது. பலமுறை, அதே பாடவிதானங்கள் எந்த மாற்றங்களும், முன்னேற்றங்களும் இல்லாமல் கணிசமான நீண்ட காலப்பகுதிக்கு பயன்படுத்தப்படுதல்.

**கொள்கை 2.2:** புதிய டிஜிற்றல் முன்னேற்றங்களுக்கு ஏற்ப பாடத்திட்டமானது அடிக்கடியும் கிரமமாகவும் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய செய்முறை கணிப்பீடுகள் மற்றும் மதிப்பீடுகளுக்கான பாடவிதானத்தில் அடிக்கடி மீளாய்வுகளை மேற்கொள்ளுதல். (அது இப்போது செய்யப்படுவது போன்று காகித அடிப்படையிலான தேர்வுகளில் மட்டுமல்லாது, செய்முறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடங்களில் குறைந்தபட்சம் 30% - 40% நடத்துவதற்குப் பரிந்துரைக்கப்படுகின்றது).
2. செய்முறை மதிப்பீடுகளுக்கு (உட்கட்டமைப்பு அபிவிருத்தி அல்லது மேம்பாடு / ஏனைய பொருத்தமான தீர்வு) பொருத்தமான பொறிமுறையை வழங்குதல்.

**கொள்கை விடயம் 2.3:** மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் குறிப்பாக தொழிற்கல்வி, மற்றும் சில நேரங்களில் பாடாசலை கல்வியில், எப்போதும் உடனடியாக கிடைப்பதில்லை. இது, தொழில்சார் கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் மிகவும் பொருத்தமான தொழில்களைக் கண்டறிவதிலிருந்து அவர்களைத் தடுக்கின்றது.

**கொள்கை 2.3:** தொழில் பயிற்சி கற்கைநெறிகள் நிறைவுற்றதன் பின்னர், மூன்றாம் நிலைக் கல்விக்குள்,தொழிற்றுறைக்குள் நுழைவதற்கு முன்னர், அனைத்து மாணவர்களுக்கும் கட்டாய தொழில் வழிகாட்டலின் தேவையை அங்கீகரித்தல்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. ஒவ்வொரு இரண்டாம்நிலை பாடசாலையும் தொழில் வழிகாட்டல் நிலையங்களைக் கொண்டிருத்தல்.
2. இரண்டாம்நிலை பாடசாலைகளிலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் தொழில் சந்தைகளில் காணப்படுகின்ற தொழில் வாய்ப்புகளை வெளிப்படுத்துதல்.
3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தால் இயலச் செய்யப்பட்ட தொழில் வழிகாட்டல் முறைமையை இணையவழி கற்றல் தளங்களுடன் இணைத்தல்.
4. தொழில் வழிகாட்டலை இணையவழி மூலம் வழங்குதல்.

DRAFT

### 3.3. நோக்கம் 3: அனைவருக்கும் டிஜிற்றல் கல்வி

ஒவ்வொரு மாணவரும், அவர் பின்பற்றும் கற்றல் துறையினைப் பொருட்படுத்தாது, பாடத்திட்டத்திற்குள் அதன் முக்கிய பகுதியாக டிஜிற்றல் திறன்களை விருத்தி செய்வதற்கான வாய்ப்பினை கொண்டிருக்கின்றனர். டிஜிற்றல் திறன் பயிற்சிப் பகுதியானது, பாடத்திட்டத்திற்கு மேலதிகமாக அல்லது இணைப்புப் பகுதியொன்றாக இருக்க வேண்டிய தேவையில்லை. கற்கைநெறியின் வகையைப் பொறுத்து, எப்போதும் பாடத்திட்டத்திற்குள் மாணவர்கள் டிஜிற்றல் திறன்களை உருவாக்குவதற்கு காலத்தின் 10 % இற்கும் அதிகமாக ஒதுக்கப்படுதல்

**கொள்கை விடயம் 8:** இது அரிதாக மாறினாலும், குறிப்பாக உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி மட்டங்களில் டிஜிற்றல் கல்விக்கு உரிய கவனம் செலுத்தப்படாது இன்னமும் கற்கைநெறிகள் உருவாக்கப்படுகின்றன. ஆகையால், மாணவர்கள் தற்போதைய தொழில் சந்தையில் நிலைத்து நிற்பதற்கு மற்றும் போட்டியிடுவதற்கு அத்தியாவசியமான டிஜிற்றல் திறன்கள் இல்லாது இந்த கற்கைநெறிகளை முடிகின்றனர். சில கற்கைநெறிகள் டிஜிற்றல் கற்கைகளுக்கு போதுமான நேரத்தை வழங்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கொள்கை 8:** ஒவ்வொரு மாணவரும், அவர் பின்பற்றும் கல்வித் துறையினைப் பொருட்படுத்தாது, பாடத்திட்டத்திற்குள் டிஜிற்றல் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருத்தல் வேண்டும், அதன் முக்கிய பகுதியாக, போதுமான நேரம் ஒதுக்கப்படுதல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. ஆரம்ப, இரண்டாம் அல்லது மூன்றாம் நிலையாகவிருந்து டிஜிற்றல் கல்வியின் அனைத்து ஆய்வு கற்கைநெறிகளிலும் முக்கிய பகுதியொன்றாக செய்முறை “நேரடி" பயிற்சியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
2. இந்தத் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றதென்பதை உறுதி செய்வதற்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பாடநெறியின் உள்ளடக்கங்களை மதிப்பாய்வு செய்து தேவைப்பட்டால் புதுப்பித்தல்.
3. மாணவர்கள் பாடநெறிகளின் போது பெற்ற செய்முறைப் பயிற்சியின் போதுமான தன்மை பற்றிய மாணவர்களின் மதிப்பீடுகள் குறித்த அவர்களது கருத்துக்களை வழங்குவதற்கு அனுமதித்தல் மற்றும் ஏதேனும் முறைப்பாடுகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
4. செய்முறை டிஜிற்றல் திறன்களை முன்னேற்றுவதற்கு ஒவ்வொரு மட்டத்திலும் மாணவர்களுக்கு தேவையான வளங்களை கல்வி அதிகாரிகள் வழங்குதல்.

## 3.4. நோக்கம் 4: தொழில்துறைக்கு ஏற்ப வைத்திருத்தல்

ஒவ்வொரு பாடசாலையிலும், பல்கலைக் கழகத்திலும் மற்றும் நிறுவகத்திலும் உள்ள கற்பிக்கின்ற / கல்விசார் பதவியினர், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் தொடர்பான பாடங்களை கற்பிப்பதில் தொழில்சார் தகுதியுள்ளவர்களாகவும் மற்றும் அனுபவமுள்ளவர்களாகவும் இருத்தல்; அவர்கள், புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகள், தொழிற்றுறைப் போக்குகள் மற்றும் மாணவர்கள் முழுமையான, மேம்படுத்தப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்படுகின்ற கல்வியொன்றினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கல்விச் செயற்பாட்டில் அவர்களின் கற்பித்தல் முறைகளை கூட்டிணைப்பதற்கு அவற்றை அடிக்கடி மேம்படுத்துதலுக்கு ஏற்ப வைத்திருத்தல்.

**கொள்கை விடயம் 4.1:** அனைத்து விரிவுரையாளர்களும், பயிற்சியாளர்களும் தொழில்துறையுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருப்பதில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் நாளைய டிஜிற்றல் தொழிலணியை உருவாக்குவதில் அத்தியாவசியமான மதிப்புமிக்க உள்ளீடு தவறவிடப்படுகின்றது.

**கொள்கை 4.1:** ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகத்திலுமுள்ள உரிய விரிவுரையாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் அனைவரும், தொழில்துறையுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், எப்போதும் தொழிற்றுறை அபிவிருத்தியுடன் இற்றைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. ஒவ்வொரு கல்வி நிறுவகமும் (பல்கலைக்கழகம், தொழிற்பயிற்சி நிறுவகம்) தமது கற்கைநெறிகள் ஒவ்வொன்றுக்கும் தொழிற்றுறை தொடர்புக் குழுவொன்றைக் கொண்டிருத்தல்.
2. ஒவ்வொரு 3 வருடங்களுக்மொருமுறை ஒவ்வொரு விரிவுரையாளருக்கும் / பயிற்சியாளருக்கும் கட்டாய தொழில்துறை வெளிப்படை மற்றும் கட்டாய தொழில்நுட்ப பயிற்சியை வழங்குதல்.
3. விரிவுரையாளர்களை / பயிற்சியாளர்களை தொழிற் பயிற்சி பெறுவதற்கு ஊக்குவிப்பதற்காக விசேட படிகளை ஏற்பாடு செய்தல்.
4. பணியாளர்களுக்கான தேவையான சாதனங்களை மலிவு விலையில் வழங்குதல், தற்போதுள்ள சம்பத் திட்டத்தை (பிற படிகளையும் கூட) மறுபரிசீலனை செய்தல்.
5. தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு, தேவையான பதவியணி நிலையை இனங்கண்டு, தற்போதுள்ள கொள்கைகள் மற்றும் சுற்றறிக்கைகளை மீளாய்வு செய்தல்.

6. டிஜிற்றல் கல்வி பாடத்திட்டத்தை அடிக்கடியும், கிரமமாகவும் புதுப்பிப்பதற்கு நெகிழ்வான பொறிமுறைகள் / செயல்முறைகளை அமைப்பதற்கு தொழிற்றுறைத் தாபனங்களுடன் (மற்றும் தேவைப்பட்டால் தனிப்பட்ட நிறுவனங்களுடன்) தொடர்ந்து கலந்தாலோசித்தல்.

DRAFT

## 3.5. நோக்கம் 5: மாணவர்களுக்கான டிஜிற்றல் சுற்றுப்புறச்சூழல்

ஒவ்வொரு கல்வி நிறுவகமும், தொழில் பயிற்சி நிறுவகமும் மாணவனை மைய டிஜிற்றல் கல்விக்கு உகந்த சிறந்த சூழலைக் கொண்டிருத்தல் வேண்டும்; அவர்களுக்கு போதுமான மற்றும் சம வாய்ப்புகளை வழங்கும் வகையில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படக்கூடிய வகையில் கணினி ஆய்வகங்கள் முழுமையாக உபகரணமயப்படுத்தப்பட்டிருத்தல்.

**கொள்கை விடயம் 5.1:** கற்றல் வளங்களில் உள்ள பௌதீக இடைவெளிகளானவை, பாடசாலை, பல்கலைக்கழகம், உயர் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி என ஒவ்வொரு மட்டத்திலும் டிஜிற்றல் கல்வியில் முக்கியமான பிரச்சனைகளாகும்.

**கொள்கை 5.1:** அனைத்து பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும், உயர் கல்வி நிறுவகங்களும் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்களும் டிஜிற்றல் கல்விக்குரிய பொருத்தமான சூழலை உருவாக்குவதற்குத் தேவையான வளங்களைக் (உபகரணங்கள்) கொண்டிருத்தல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் ஆகிய அனைத்து கல்வி நிறுவகங்களாலும் வருடாந்தம் ஆய்வுகளை நடத்துதலும், சரியாகப் பயன்படுத்துபவரின் தேவைப்பாடுகளைக் கண்டறிதலும்.
2. பாடத்திட்டத்திற்கு உரிய உபகரணமிடப்பட்ட கணினி ஆய்வகங்களை நன்கு பராமரித்தல்.
3. கல்வி நிறுவனங்களுக்கு அவர்களுக்குத் தேவையான உபகரணங்களை மற்றும் இடத்தை அல்லது அதற்கு மாற்றானவற்றையோ, அவற்றைக் கொள்வனவு செய்ய நிதிகளையோ வழங்குதல்.
4. அவ்வாறு வழங்கப்பட்டுள்ள கற்றல் வளங்களைப் பாதுகாத்து, அதனால். பதிலீட்டினை எதிர்பார்க்காது கணிசமான நீண்ட காலப்பகுதியொன்றுக்கு அதே உபகரணங்களை / வசதிகளை பல தொகுதி வகுப்புகளுக்கும் பயன்டுத்துதல் .
5. கல்வி நிறுவகங்கள், மாணவர்களின் பயன்பாட்டிற்காக உரிய நல்ல வேலை செய்யும் நிலையில் வசதிகளை கண்காணித்து, பராமரித்தல்.
6. கல்வி நிறுவகங்கள், கிரமமாக அடிக்கடி உபகரணங்களின் நிலையை சரிபார்த்து,

சேதமடைந்தவைகளுக்காக பதிலீடுகளை எடுத்துரைத்தல்.

7. படிப்புகள் மேற்கொள்ளப்படுவதற்கு போதுமான அளவு கற்றல் வளங்கள் (புத்தகங்கள், பத்திரிகைகள், வீடியோக்கள் போன்றவை) போதுமானவையா / மேம்படுத்தப்பட்டவையா என்பதை தொடர்ந்தேர்ச்சியாக சரிபார்த்தல்.

8. பிரதான நிதி வளங்களுக்கு மேலதிகமாக, (சாத்தியமாயின்) கற்றல் வளங்களுக்கான நிதிகளைக் கண்டுடறிவதற்கு (புத்தகங்கள், சஞ்சிகைகள், வீடியோக்கள் போன்றவை) ஏனைய வழிகளைப் பயன்படுத்துதல்.

DRAFT

## 3.6. நோக்கம் 6: டிஜிற்றல் கல்விக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்றல் வளங்கள்

மாணவர்கள், ஆரம்ப, இரண்டாம் அல்லது மூன்றாம் நிலைகளில் இருந்து, அவர்களின் கற்றலுக்குத் தேவையான வளங்களை (புத்தகங்கள், பத்திரிகைகள், வீடியோக்கள் போன்றவை) மலிவு விலையில் கண்டறியப்படுதல். இந்த வளங்கள் உயர் தரத்திலானவையும் இற்றைப்படுத்தப்பட்டவையாகவும் இருத்தல்.

**கொள்கை விடயம் 6.1:** ஆரம்ப, இரண்டாம் அல்லது மூன்றாம் நிலையிலுள்ள அனைத்து மாணவர்களும், எப்போதும் குறைந்த செலவில் தங்கள் கற்கைகளுக்கான கற்றல் வளங்களைக் கண்டறிய முடிவதில்லை.

**கொள்கை 6.1:** அனைத்து பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறகைங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்கள் கல்வி நோக்கங்களுக்காக தங்கள் மாணவர்களுக்கு தேவையான கற்றல் வளங்களை (புத்தகங்கள், பத்திரிகைகள், வீடியோக்கள் போன்றவை) கிடைக்கச் செய்யதல்வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவகங்கள் மற்றும் கற்றல் (புத்தகங்கள், பத்திரிகைகள், வீடியோக்கள் போன்றவை) வளங்களுக் கான தொழிற்பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பயன்படுத்துபவரின் தேவைப்பாடுகளைக் கண்டறிவதற்கு தொடர்ந்து ஆய்வுகளை நடத்துதல்.
2. மாணவர்களின் பயன்பாட்டிற்காக பாரம்பரிய மற்றும் டிஜிற்றல் உள்ளடக்கத்துடன் நூலகங்களைப் பராமரித்தல்.
3. கல்வி நிறுவனங்களுக்குத் தேவையான கற்றல் வளங்களையோ அல்லது அதற்கு மாற்றானவற்றையோ, அவற்றைக் கொள்வனவு செய்ய நிதிகளையோ வழங்குதல்.
4. அவ்வாறு வழங்கப்பட்டுள்ள கற்றல் வளங்களைப் பாதுகாத்து, அதனால். பதிலீட்டினை எதிர்பார்க்காது கணிசமான நீண்ட காலப்பகுதியொன்றுக்கு அதே உபகரணங்களை/வசதிகளை பல தொகுதி வகுப்புகளுக்கும் பயன்டுத்துதல் .
5. கல்வி நிறுவகங்கள், கிரமமாக அடிக்கடி கற்றல் வளங்களின் நிலையை (புத்தகங்கள், பத்திரிகைகள், வீடியோக்கள் போன்றவை) சரிபார்த்து, சேதமடைந்தவைகளுக்காக பதிலீடுகளை எடுத்துரைத்தல்.

6. படிப்புகள் மேற்கொள்ளப்படுவதற்கு போதுமான அளவு கற்றல் வளங்கள் (புத்தகங்கள், பத்திரிகைகள், வீடியோக்கள் போன்றவை) போதுமானவையா / மேம்படுத்தப்பட்டவையா என்பதை தொடர்ந்தேர்ச்சியாக சரிபார்த்தல்.
7. பிரதான நிதி வளங்களுக்கு மேலதிகமாக, (சாத்தியமாயின்) கற்றல் வளங்களுக்கான நிதிகளைக் கண்டுடறிவதற்கு (புத்தகங்கள், சஞ்சிகைகள், வீடியோக்கள் போன்றவை) ஏனைய வழிகளைப் பயன்படுத்துதல்.

DRAFT

## 3.7. நோக்கம் 7: கற்றல் முகாமைத்துவ முறைமைகள்

ஒவ்வொரு பாடசாலையும், பல்கலைக்கழகமும், உயர் கல்வி நிறுவகமும், தொழில் பயிற்சி நிறுவகமும் கல்வி செயல்பாட்டில் சிறந்த முறையில் கற்றல் முகாமைத்துவ முறைமைகளை பயன்படுத்துதல்.

**கொள்கை விடயம் 7.1:** அனைத்து கல்வி நிறுவகங்களும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு கற்றல் முகாமைத்துவ முறைமைகளைப் பயன்படுத்துவதில்லை.

**கொள்கை 7.1:** அனைத்து பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்கள், கல்வி நோக்கங்களுக்காக பொருத்தமான கையில் கற்றல் முகாமைத்துவ முறைமைகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. கல்வி நடவடிக்கைகளுக்காக தேவைப்படும் அனைத்து கற்கை நெறிகளுக்கும் கற்றல் முகாமைத்துவ முறைமைகளின் (எல்.எம்.எஸ்.) தீர்வுகளை அறிமுகப்படுத்துதல்.
2. கற்றல் முகாமைத்துவ முறைமைகளின் (எல்.எம்.எஸ்.) பயன்பாட்டுக்காக கற்பிக்கின்ற பதவியினருக்கும் மற்றும் மாணவர்களுக்கும் பயிற்சியளித்தல்.
3. கல்வி நிறுவகங்கள் மூலம் கற்றல் முகாமைத்துவ முறைமைகளைப் (எல்.எம்.எஸ்.) பேணுதல்.

DRAFT

## 3.8. நோக்கம் 8: சுய கற்றலை அங்கீகரித்தல் மற்றும் வசதிப்படுத்துதல்

டிஜிற்றல் கல்வியானது வகுப்பறைகளுக்குள் கட்டுப்படுத்தப்பட முடியாதது என்பதுடன் கட்டுப்படுத்தக் கூடாதது, ஆனால் மாணவர்கள், எதிர்காலத்தில் தகுதிவாய்ந்த டிஜிற்றல் தொழில்சார் நிபுணர்களாக விளங்குவதற்கு முக்கிய பாடங்களில், அதேபோன்று ஏனைய தொடர்புடைய பாட விடயப்பரப்பில் அவர்களது அறிவை மேம்படுத்துவதற்கு தாம் சுயமாக கற்றலை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கப்படுதல்.

**கொள்கை விடயம் 8.1:** சுய கற்றல் டிஜிற்றல் கல்வியின் இன்றியமையாத பகுதியாகும், ஆனால் அது அரிதாகவே உரிய அங்கீகாரத்தைப் பெறுகின்றது. அனைத்து கற்கைநெறிகளும் கணிசமான சுய கற்கைப் பிரிவுகளை உள்ளடக்குவதற்கு வடிவமைக்கப்படவில்லை.

**கொள்கை 8.1:** சுய கற்றல் டிஜிற்றல் கல்வியில் முக்கியமானதொரு பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மாணவர்கள் தகுதிவாய்ந்த டிஜிற்றல் வல்லுநர்களாக வருவதற்கு டிஜிற்றல் சுய கற்றலுக்கு டிஜிற்றல் உட்கட்டமைப்பு ஆதரவை உருவாக்குவது அத்தியவசியமானதாகும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. பாடத்திட்டத்தை மீண்டும் பார்வையிடும்போதும் மாற்றும்போதும் உரிய அனைத்து கற்கைநெறிகளிலும் சுய கற்றல் பகுதியையும் அறிமுகப்படுத்துதல்.
2. மாணவர்கள் சுய கற்றல் பகுதிகளை பூர்த்தி செய்வதை கண்காணித்து உறுதி செய்தல்.
3. அனைத்து பாடத்திட்டங்களுடனும் வளங்களையும், மதிப்பீட்டு முறைமைகளையும் கிடைக்கச் செய்தல் கற்பவரை மையமாகக் கொண்ட கல்வி கோட்பாடுகளால் வழிநடத்தப்படுதல்.
4. பாடங்களில் சுய கற்றலுக்கு முன்னுரிமை அளிக்கின்ற அதேவேளை சுய கற்றல் நடவடிக்கைகளுக்கு மதிப்பெண்களை வழங்குவதற்கு தரப்படுத்தல் முறைமையை உருவாக்குதல்.
5. இணையவழி சுய மதிப்பீட்டு பரீட்சைகளை அறிமுகப்படுத்துதல்.
6. சுய நிலைத்தன்மை மாதிரி வரையிலான அளவில் நெனசல திட்டத்தை மீண்டும் புத்துயிரளிப்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்.

## 3.9. நோக்கம் 9: மென் திறன் விருத்தி

டிஜிற்றல் கல்வியில் எப்போதும் வன் திறன்கள், மென் திறன்கள் (மொழி, தனிப்பட்ட வளங்களும் சந்தைப்படுத்தல், பேச்சுவார்த்தை, செயல்விளக்கம், தொடர்பாடல், குழுச் செயற்பாடு, தலைமைத்துவம் போன்றவை உள்ளடங்கலாக) ஒன்றோடொன்று இணைந்து செல்கின்ற முக்கிய பகுதியொன்றினை, மாணவர்களின் டிஜிற்றல் கல்வி செயல்முறையின் போது அவர்களிடையே உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டு, பதியச் செய்தல்.

**கொள்கை விடயம் 9.1:** மென் திறன்கள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வன் திறன்களுடன் இணைந்து செல்லுதல் வேண்டும் என்று எப்போதும் புரிந்து கொள்ளப்படுவதில்லை. ஆகவே, மென் திறன்களை விருத்திசெய்வது டிஜிற்றல் திறன் பயிற்சியின் முக்கிய பகுதியாக கருதப்படுவதில்லை.

**கொள்கை 9.1:** மென் திறன்கள் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப திறன்கள் உள்ளடங்கலாக) கற்கைநெறி பாடத்திட்டத்தின் இன்றியமையாத பகுதியாக இருத்தல் வேண்டும் .

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. நிலைமையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் உள்ளடங்கலாக அனைத்து பாடத்திட்டங்களிலும், மொழி, தனியாள் வளங்களும் சந்தைப்படுத்தலும், முன்னளிக்கை மற்றும் பேச்சுவார்த்தை திறன்கள் உள்ளடங்கலாக மென் திறன்களை பதிப்பதற்கான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான குறிக்கோளுடனான கவனம் செலுத்துதல்.
2. இணைய வழி சுய கற்றல் ஆங்கில கற்றல் பிரயோகத்தை அறிமுகப்படுத்துகின்ற அதேவேளை ஒவ்வொரு தொழிற்கல்வி கற்கைநெறியிலும் ஆங்கில மொழியினைக் கட்டாய பாடத் தொகுதியாக அறிமுகப்படுத்துதல்.

DRAFT

## 3.10. நோக்கம்10: கல்வி அமைப்புகளுக்கான டிஜிற்றல் முகாமைத்துவ முறைகள்

முழுமையாக உறுதியளிக்கப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமைகள், அனைத்து கல்வி நிறுவகங்கள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்களிலும் நிருவாகத்திற்காக பணிகளை மனித வலுவினால் மேற்கொள்வதற்குப் பதிலாக பயன்படுத்துதல்.

**கொள்கை விடயம் 10.1**: தற்போது, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கல்வி நிறுவகங்கள் மட்டுமே முகாமைத்துவ முறைமைகளைப் பயன்படுத்தி நிருவகிக்கப்படுகின்றன. இதன் விளைவாக நிருவாகத்திற்கு தேவையான தகவல்கள் இல்லாமல் இருக்கலாம், முகாமைத்துவ முடிவுகளை எடுப்பதில் தாமதமாக இருக்கலாம் என்பதுடன் வளங்களின் சிறந்த பயன்பாட்டையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**கொள்கை 10.1:** அனைத்து கல்வி நிறுவகங்களின் நிருவாகமும் முகாமைத்துவ முறைமைளுடன் நடத்தப்படுதல் வேண்டும்

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும், அவற்றின் கல்வி மற்றும் நிருவாக முகாமைத்துவ நோக்கங்களுக்காக விரிவான முகாமைத்துவ முறைமைகளை வழங்குதல்.

DRAFT

## 3.11 நோக்கம் 11: நிருவாக பதவியினரின் டிஜிற்றல் திறன்கள்

அனைத்து கல்வி நிறுவனங்களின் நிருவாகிகளும், தமது அன்றாட நடவடிக்கைகளில் கையாள வேண்டியிருக்கின்ற முறைமைகள் மற்றும் பிரயோகங்களுக்குத் தேவையான டிஜிற்றல் திறன்களை கற்றறிந்திருத்தல்.

**கொள்கை விடயம் 11.1:** டிஜிற்றல் திறன் இன்மையால், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவகங்கள், தொழிற்பயிற்சி நிறுவகங்கள் போன்றவற்றில் நிருவாக பதவியினரால் நிருவாகத்தில் மற்றும் தீர்மானமெடுப்பதில் எப்போதும் டிஜிற்றல் திறன்கள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

**கொள்கை 11.1:** பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்களில் நிருவாகத்தின் போதும், தீர்மான மெடுக்கின்ற போதும் நிருவாக பதவியினரின் டிஜிற்றல் திறன்கள் உரிய முறையில் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. நிருவாகிகள் தமது அன்றாட நிருவாக செயற்பாடுகளில் டிஜிற்றல் திறன்களை செம்மைப்படுத்துவதற்கான பொறிமுறைகளைக் கொண்டிருத்தல்.
2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் களங்களில் முடிவெடுப்பதில் கள நிபுணர்களின் பரிந்துரைகளைப் பயன்படுத்துதல்.

DRAFT

## 3.12. நோக்கம் 12: இணைய வழிக் கற்றல்

வழக்கமான முறையிலமைந்த கற்றல் செயற்பாடுகளிலிருந்து மாணவர்கள் தடுக்கப்படுகின்ற சூழ்நிலை காணப்படுகின்றவிடத்து, டிஜிற்றல் கல்வி முறைமைகள் அவர்கள் தவறவிட்ட கற்றல் செயற்பாடுகளை வழங்குவதற்கு சிறப்பாக பயன்படுத்தப்பட்டவையாக இருக்கின்றன; அரசாங்கமானது, புவியியல் ரீதியான அமைவிடங்கள், அவர்களின் குடும்ப சமூக-பொருளாதார நிலைமைகள் போன்றவற்றைப் பொருட்படுத்தாது 'இலவசக் கல்வி' என்ற உண்மையான உணர்வுடன் இயலுமானளவில் தொடர்ச்சியான மற்றும் கிரமமான கல்வியை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறச்செய்து, இயலுமானவரையில் அவர்களின் பின்னணியைப் பொருட்படுத்தாது பாரம்பரிய வகுப்பறை கல்விக்கு நெருக்கமாக உட்கட்டமைப்பு வசதிகளை (சாதனங்கள், இணைப்புகள் போன்றவை) முடிந்தவரை வழங்குதல்.

**கொள்கை விடயம் 12.1:** இணைய வழிக் கல்விக்கு இணைப்பில் போதுமான அலைவரிசை மற்றும் தரம் அவசியமானதாகும். இருப்பினும், நம்பகமான மற்றும் பயனுள்ள இணைப்பு நாடு முழுவதும் கிடைப்பதில்லை. இணைப்பு இல்லாதது நாட்டின் பல பகுதிகளிலுள்ள பொதுவான பிரச்சினையொன்றாகும்.

**கொள்கை 12.1:** இணைப்பு என்பது ஒரு சிலருக்கு ஆடம்பர வசதியாக இருத்தலாகாது, மாறாக அனைத்து மாணவர்களுக்கும் அவர்களின் புவியியல் அமைவிடங்கள் மற்றும் குடும்பங்களின் சமூக பொருளாதார நிலைமைகளைப் பொருட்படுத்தாது கிடைக்குமொரு வசதியாக இருத்தல் வேண்டும். இணையவழிக் கல்விக்காக "அனைவருக்கும் இணைப்பு" (தாங்கிக் கொள்ளக் கூடிய விலையில்).

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. குறைந்த செலவில் தரமான தரவுகளை வீட்டிலும் பாடசாலையிலும் அடையக் கூடியதாக ஒவ்வொரு பிள்ளையும் இருப்பதற்கான கொள்கை யொன்றைக் கொண்டிருப்பதன் மூலம், பாடசாலைகள் மற்றும் மாணவர்களால் எதிர்கொள்ளப்பட்ட இணைப்புசார் (வீட்டுத் தொடர்பு உள்ளடங்கலாக ) சிக்கல்களை தெரியப்படுத்துதல். வலையமைப்புகளின் மேவுகையானது நாடளாவிய ரீதியில் இருத்தல் வேண்டும்.)

2. வளர்ந்து வருகின்ற இணையவழிக் கல்வித் தேவைப்பாடுகளுக்கு தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை உருவாக்குதல் அல்லது மேம்படுத்துதல்.

3. கல்விசார் நோக்கங்களுக்காக இணைய அணுகல், தரவு பயன்பாட்டுக் காகவும், மற்றும் இயலுமானவரையில் சாத்தியமான அனைத்து வாய்ப்பு களிடமிருந்தும் மலிவு விலையில் நாடளாவியரீதியில் இணைப்புகளையும் தரவுகளையும்

வழங்குவதற்கும் தேசிய கொள்கையொன்றை உருவாக்குதல்.

4. ஒவ்வொரு கிராமத்திற்கும் நவீன தொழில்நுட்பங்கள் உள்ள பொது நிலையங்களை நடைமுறைப்படுத்துவதனை ஊக்குவித்தல் மற்றும் தேவையின் அடிப்படையில் கட்டணம் செலுத்துதல் மற்றும் இலவச அடிப்படையில் சேவையை வழங்குதல்.
5. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நாடளாவிய ரீதியில் இலவச அல்லது மலிவு விலையில் இணைய பொதிகளை வழங்குவதற்கு சேவை வழங்குநர்களை ஏற்பாடு செய்தல்.

**கொள்கை விடயம் 12.2:** இணையக் கல்விக்கான இறுதி சாதனங்கள், இணைப்பு என்பதில் சிக்கலானதாகவுள்ளன. சாதனங்களுடனான பிரச்சினையானது, பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்காக அவற்றினை வாங்க முடியாத நிலையிலிருப்பதாகும்.

**கொள்கை 12.2:** ஒவ்வொரு பிள்ளைக்கும் அவர்களின் சமூக மற்றும் பொருளாதார பின்னணிகள் பொருட்படுத்தாது, அவர்களுக்கு பொருத்தமான இறுதி சாதனங்களைக் கிடைக்கச் செய்து, நீண்ட காலப்போக்கில் இணையவழிக் கல்விக்காக "ஒரு மாணவருக்கு ஒரு சாதனம்" என்பதாக இணைய வழிக் கல்வியை அரசாங்கம் சாத்தியமாக்குதல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. சாதனங்களை வாங்க முடியாத மாணவர்களுக்கு இலவசமாக அல்லது மலிவு விலையில் சாதனங்களை வழங்குதல்
2. இணையவழி கற்பித்தலில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஆசிரியருக்கும் பொருத்தமான சாதனத்தை வழங்குதல்.
3. பாடசாலைகளுக்கான சாதனங்களை அவர்கள் பகிர்ந்து கொள்ளும் வகையில் பிள்ளைகளுக்கு வழங்குதல்.
4. இரு தரப்பினரும் (விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள்) சாதனங்களை கொள்வனவு செய்வதற்காக கல்விசார் உள்நாட்டு வர்த்தக வங்கிகளுடன் கடன் திட்டங்களை உருவாக்குதல்.

**கொள்கை விடயம் 12.3:** உள்ளார்ந்த கட்டுப்பாடுகளுடனான இணையக் கல்வி, பாரம்பரிய வகுப்பறைக் கல்விக்கு பொருத்தமான மாற்றுக் கல்வியாக இருக்க முடியாது. இணையம் பற்றிய பிரச்சினைகள் பற்றிய பிரச்சினைகள் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களால் அடிக்கடியும், தொடர்ந்தும் எழுப்பப்பட்டுள்ளன.

**கொள்கை 12.3:** இணையக் கற்றலானது, அது பெறுபேற்றுக்கு வரும் போது பாரம்பரிய வகுப்பறை கற்பித்தலுக்கு சமமாக அல்லது நெருக்கமாக இருத்தல் வேண்டும்; இணையவழி முறையில் ஏற்படும் மாற்றம் காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படக்கூடாது.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. இணையவழி கல்விக்கான (கற்பித்தல், கற்றல், மதிப்பீடு, ஆராய்ச்சி மற்றும் நிருவாகம்) ஆளுகைக் கொள்கையை விருத்தி செய்தல்
2. இணையவழி கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீடுகளுக்கான பொதுவான வழிகாட்டுதல்களை உருவாக்குதல்.
3. மேற்பார்வை மதிப்பீடுகளை மேற்கொள்வதில் உள்ள சிரமங்களிலிருந்து வெளிவருவதற்கு, மாற்று மதிப்பீட்டு முறைகளில் ஈடுபடுகின்ற கட்டமைப் பொன்றை உருவாக்குதல். உதாரணம்: முன்னளிக்கைகள், வாய்மூலம், குழு ஒப்படைகள், வலைப்பதிவுகள், வினாடி வினாக்கள் போன்றவை.
4. உரையாடுவதற்குத் தேவையான கருவிகளை வாங்குவதனால், அவர்கள் உரையாடலின் அடிப்படையிலான தேர்வுகள், எல்.எம்.எஸ், சக மதிப்பாய்வு முறைகள் மற்றும் நிறுவகத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையின் ஆதரவுடன் ஏனைய தொடர்புடைய கருவிகளை ஏற்பாடு செய்ய முடியும்.
5. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் செயலமர்வுகளின் நீண்ட நேரத்தால் சோர்வடைவதைத் தவிர்ப்பதற்கு, கற்பித்தல் செயல்முறை (விரிவுரைகள், செய்முறைகள் போன்றவை) கலப்பு கற்றல் கருவிகளை சரியான முறையில் பயன்படுத்துகின்ற மாணவர் மீது கவனம் செலுத்தும் வழிகாட்டுதல்களைத் தயாரிக்கவும். உதாரணம்: உயர் கல்வி மாணவர்களுக்கு,செயலமர்வு காலத்தை 1-2 மணி நேரமாக வரையறுத்தல்.
6. சுய கற்றல் நுட்பங்களை செம்மைப்படுத்துதல் மற்றும் பாடத்திட்டத்தின்

அடிப்படையில் விரிவுரை நேரத்தை குறைத்தல்.

7. இணையக் கல்வியிலுள்ள பிரச்சினைகளை பின்வருவனவற்றால் தீர்த்துவைத்தல் (குறிப்பாக பெரும்பாலான தொழிற்கல்வி பகுதிகள் மிகவும் நடைமுறை சார்ந்தவை என்பதால்):

   - அனைத்து பயிற்சியாளர்களும் டிஜிற்றல் மற்றும் இ-போதனை ஆற்றல்களுடன் பயிற்சியளிக்கப்படுகின்றனர் ;நடைமுறையில் உண்மையான கற்றல் சூழலில் கற்றல் முறை முறைமையொன்றினால் (LMS) (ஒத்திசைவற்ற) அனைத்து இணையத் தளக் கல்வி (ஒத்திசைவு) நிகழ்ச்சித்திட்டங்களும் பின்னிணைப்பாக உள்ளது.
   - தேசிய மட்டத்திலான இ-கற்றல் வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ நிலையம் நிறுவப்படுதல்.
   - நடைமுறை சார்ந்த மென்பொருளை அறிமுகப்படுத்துதல், அத்துடன்
   - அறிவைப் பகிர்ந்து கொள்ளவும் கேள்விகளைக் கேட்கவும் அனைத்து மாணவர்களுக்கும் இணையத் தள மேடையொன்றினை (மன்றம்) உருவாக்குதல்.

**கொள்கை விடயம் 12.4:** இணைப்பு மற்றும் சாதனங்கள் கிடைப்பது அத்தியவசியமானதாகும், ஆனால் இணையக் கல்விக்கு போதுமான நிபந்தனைகளல்ல. இது வெற்றி பெறுவதற்கு இன்னும் பல நிபந்தனைகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். முக்கியமான தேவை கல்வித் தளங்கள் ஆகும். இலங்கை, இணையவழி கல்வித் தளங்களை நன்கு அபிவிருத்தி செய்துள்ளது, ஆனால், அவை மாணவர்களால் முழுமையாக அங்கீகரிக்கப்படாமல் போகலாம். ஆகவே, அவை அங்கீகாரத்தைப் பெறுவது அத்தியவசியமாகும்.

**கொள்கை 12.4:** இ-தக்ஸலாவா போன்ற கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத் தப்பட்ட அத்தகைய தொழில்நுட்ப மற்றும் ஒலிபரப்பு முயற்சிகள் தேசிய மட்ட இ-கற்றல் தளங்களாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பொதுமக்கள் அவற்றைப் பற்றி அறிந்திருத்தலும் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. 'குருகேதர' மற்றும் 'இ-தக்ஸலாவ' ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு இன்மையை வெளிப்படுத்துவதற்கு வெகுஜன ஊடகம், சமூக

DRAFT

ஊடகம், பதிப்பு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் போன்ற பொருத்தமான அலைவரிசைகளைப் பயன்படுத்தி மும்மொழி விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்தி, குருகேதர மற்றும் இ-தக்சலாவாவுக்கு தரமான, ஊடாடும் உள்ளடக்கங்களை உருவாக்குதல்

2. குருகெதர மற்றும் இ-தக்சலாவாவிற்கான தரமான மற்றும் ஊடாடும் உள்ளடக்கங்களை உருவாக்குதல்.

**கொள்கை விடயம் 12.5:** அண்மைய அனுபவங்கள் மூலம், விரிவுரையாளர்களிலிருந்து மாணவர்கள் வரை இணையக் கல்வி மீதான தொழில்நுட்ப சிக்கல்கள் நிலையாகக் காணப்பட்டுள்ளன. இந்த தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக பல அமர்வுகள் முன்கூட்டியே நிறுத்தப்பட்டுள்ளன.

**கொள்கை 12.5:** இணையவழிக் கல்வி செயற்பாடுகளானவை, மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு குறைந்தபட்ச தொழில்நுட்ப தொந்தரவுகள் மற்றும் குறைந்தபட்ச நேர விரயத்துடன் தொழிற்படுதல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. இணையவழிக் கல்வியை வழங்குவதில் ஏற்படுகின்ற நடைமுறைச் சிக்கல்களுக்கு இணைய தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதற்கு போதியளவு ஆதரவுப் பணியாளர்களுடன் முழுநேரச் சேவையை ஏற்பாடு செய்தல்.

DRAFT

## 3.13 நோக்கம் 13: டிஜிற்றல் கருவிகளைக் கையாள்வதிலுள்ள ஆற்றல்கள் (ஆசிரியர்கள் / கல்வியாளர்கள்)

பயிற்றுநர்கள் மற்றும் கற்பித்தல் உதவியாளர்கள் உள்ளடங்கலாக கற்பித்தல்சார் / கல்வியாளர்கள் கற்பித்தல் கருவிகளாக அவர்கள் பயன்படுத்துகின்ற டிஜிற்றல் தொழில்நுட்பங்கள் மற்றும் முறைமைகளை முழுமையாக கற்றறிந்தவர் களாக இருத்தல். அத்துடன், அவர்கள் தேவையான டிஜிற்றல் கருவிகள் மற்றும் பிரயோகங்களுடன், அவை வன்பொருள் அல்லது மென்பொருளாக இருந்து கற்பித்தல் நோக்கங்களுக்காக முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்டவை.

**கொள்கை விடயம் 13.1:** கல்விசார் / கற்பித்தல்சார் / கல்வி சாரா பதவியினர்கள் அனைவரும் அவர்களின் நாளாந்த செயற்பாடுகளில் கட்டாயமாக டிஜிற்றல் கருவிகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கின்றது என்பதை பரவலாக அறிந்திருக்கவில்லை.

2. **கொள்கை 13.1:** ஆசிரியர்கள் (குறிப்பாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லாத ஆசிரியர்கள்), அதிபர்கள் மற்றும் அலுவலர்கள் அவர்களின் உரிய பணிப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய டிஜிற்றல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் டிஜிற்றல் திறன்களை மையமாகக் கொண்டு அவர்களின் வருடாந்த இலக்குகளுக்கு டிஜிற்றல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு புள்ளிபெறும் பொறி முறையுடன் வருடாந்த மதிப்பீடுகளை நடத்துதல்.
2. அவர்கள் பணியாற்றும் பகுதிகளுக்கு (கற்றல் பெறுபேறு போன்றவை) டிஜிற்றல் திறன்களை மதிப்பிடுகின்ற பிரிவுகளை இணைப்பதைக் கட்டாயமாக்குதல்.
3. டிஜிற்றல் எழுத்தறிவை உறுதி செய்வதற்கு ஒவ்வொரு மட்டத்திற்கும் தயாரிக்கப்பட்ட பாடத் தொகுப்புகளை அனைத்து ஆசிரியர்களும், அதிபர்களும் மற்றும் அலுவலர்களும் நிறைவு செய்வதனைக் கட்டாயமான நிபந்தனையாக்குதல்.
4. கற்பித்தல்-கற்றல் செயல்முறையில் பயன்படுத்தக்கூடிய டிஜிற்றல் சாதனங்களின் எல்லையை அடையாளம் காணுதல்.

## 3.14 நோக்கம் 14: டிஜிற்றல் கருவிகளைக் கையாளும் ஆற்றல்கள் (மாணவர்கள்)

அனைத்து மாணவர்களும் தமது தொலைதூரக் கல்வி நோக்கங்களுக்காக டிஜிற்றல் கருவிகளைக் கையாள்வதில் தகுதிவாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

**கொள்கை விடயம் 14.1:** டிஜிற்றல் கருவிகளைக் கையாளுவதற்குத் தேவையான ஆற்றல்களுடன் மாணவர்கள் இசையவில்லை என்றால் கற்றல் செயற்பாடுகள் சிரமமாக இருக்கும்.

**கொள்கை 14.1:** மாணவர்கள் போதுமான டிஜிற்றல் திறன்களைக் கொண்டிருக்க வேண்டும், இதனால் அவர்கள் இணையவழிக் கல்வி கருவிகளை வினைத்திறனுடன் பயன்படுத்த முடியும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. அணுகக் கூடிய வடிவங்களிலும் செய்முறை மதிப்பீடுகனூடாகவும் பொருத்தமான பயிற்சி உள்ளடக்கத்தை உருவாக்குவதுடன் மாணவர்களின் டிஜிற்றல் திறன் இடைவெளிகளை வெளிப்படுத்துதல்.
2. பல்கலைக்கழக மட்டத்தில் உயர் கல்வித் துறையை இலக்காகக் கொண்டு குறிப்பிட்ட பயிற்சித் திட்டங்களைக் கொண்டிருந்து, அவற்றை கட்டாயமாக்குதல்.
3. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும், ஏனைய அக்கறைதாரர்களுக்கு பயிற்சி யளிப்பதற்கும், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கும், தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும் அலகொன்றினைக் கொண்டிருத்தல். (ஆங்கில பயிற்சி அலகினைப் போன்று)

## 3.15. நோக்கம் 15: டிஜிற்றல் வெளியில் பாதுகாப்பு

மாணவர்கள் பாதிப்படையக்கூடிய தன்மைகளை ஆசிரியர்களும், அதிகாரிகளும் புரிந்துகொள்வதன் மூலம் டிஜிற்றல் வெளியில் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல்; அவர்களுக்கு தேவையான பாதுகாப்புகள் வழங்கப்படுதல் வேண்டும்.

**கொள்கை விடயம் 15.1:** சில தரப்பினர் சிறுவர்களது பாதிப்படையக்கூடிய தன்மையை தமக்கு சாதகமாக்கிக் கொள்வதனால், அவர்கள் இணைய வெளியில் அதிகளவு அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்கின்றனர் .

**கொள்கை 15.1:** ஆரம்ப, இரண்டாம் மற்றும் உயர் ஆகிய அனைத்து மட்டங்களிலுமுள்ள ஒவ்வொரு மாணவரும், ஆசிரியர்கள், பெற்றோர்கள்/ பாதுகாவலர்கள் மற்றும் பாடசாலை / பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி / தொழில் பயிற்சி நிறுவகத்தின் நிருவாகிகளின் கூட்டு முயற்சிகளினூடாக சைபர் அச்சுறுத்தல்களிலிருந்து (அல்லது டிஜிற்றல் வெளியிலுள்ள பிற அசௌகரியங் களிலிருந்து) பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. டிஜிற்றல் கல்வியின் பிரதான தேவைப்பாடொன்றாக இணைய அச்சுறுத்தலிலிருந்து மாணவர்களைப் பாதுகாக்கின்ற அனைத்து கல்வித் தாபனங்களையும் இனங்காணுதல்.
2. பாடசாலை/பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி அதிகாரசபைகள் பெற்றோர்களுடனும் / பாதுகாவலர்களுடனும் நெருங்கிய உறவுகளைப் பேணுதல் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பான ஏதேனும் தொடர்புபடுத்தல்களை உடனடியாக மேற்கொள்ளுதல்.
3. பாடசாலை / பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி அதிகாரசபைகள் இலங்கை பொலிஸ் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை போன்ற அத்தகைய அதிகாரசபைகளுக்கு நடைபெறுகின்ற ஏதேனும் நிகழ்வுகள் உடனடியாக அறிக்கையிடுவதனுடாக பொறிமுறைகளைப் பேணுதல்.
4. பாடசாலை / பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி அதிகாரசபைகள், துஸ்பிரயோகம் செய்யப்படக்கூடிய சில தரப்பினரின் பாதிக்கப்படக் கூடியமைக்கு எதிராக அவர்களது முறைமைகளை காலத்திற்கு காலம் கண்காணித்து, சரியான நடவடிக்கைகளை எடுத்தல்.
5. கறுப்புப்பட்டியலிடப்பட்ட தளங்களை மாணவர்கள் அணுகுவதை

மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

6. கல்வித் துறைக்கான கணினி அவசர பதிலளிப்பு அணியொன்றினை (CERT) அறிமுகப்படுத்துதல்.

DRAFT

## 3.16. நோக்கம் 16: தகவல் அறியப் பெற்ற பெற்றோர்/பாதுகாவலர்கள்

பெற்றோர்களும் / பாதுகாவலர்களும் டிஜிற்றல் கல்விக்கான தேவைகள் பற்றி நன்றாக அறிந்திருத்தல் வேண்டும் என்பதுடன், அதற்கு உகந்த சூழலை வீட்டில் உருவாக்குதலும் வேண்டும்; அவர்கள் பிள்ளைகளுக்கு சிறந்த முறையில் கல்வியில் ஆதரவளித்தல் வேண்டும்.

**கொள்கை விடயம் 16.1:** தமது பிள்ளைகளின் டிஜிற்றல் கல்விக்கான தேவைகள் மற்றும் தேவைப்பட்ட சூழல் பற்றி அனைத்து பெற்றோர்களும்/ பாதுகாவலர்களும் அறிந்திருக்கவில்லை.

**கொள்கை 16.1:** ஆரம்ப, இரண்டாம் மற்றும் உயர் நிலை ஆகிய அனைத்து மட்டங்களிலும் ஒவ்வொரு மாணவர்களினதும் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள், டிஜிற்றல் கல்வியின் தேவைப்பாடுகள் பற்றி அறிந்திருத்தல் வேண்டும் என்பதுடன், அவர்களது பிள்ளைகளுக்கு உகந்த சூழலை அவர்கள் வழங்குதலும் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. AGS அலுவலகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சு, குடும்ப சுகாதார அலுவலர்கள் போன்ற அத்தகைய தேசிய மட்டத்திலான அக்கறைதாரர் தரப்புகளின் தலையீட்டுடன் பெற்றோர்கள்/ பாதுகாவலர்களுக்கான விழிப்புணர்வுசெயலமர்வுகளை நடத்தவதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட பொறிமுறையொன்றினைக் கொண்டிருத்தல்.

DRAFT

## 3.17 நோக்கம் 17: நிலையான டிஜிற்றல் மயமாக்கல்

ஒவ்வொரு பாடசாலையிலும், பல்கலைக்கழகத்திலும், உயர் கல்வி நிறுவகத்திலும் மற்றும் தொழில் பயிற்சி நிறுவகத்திலும் உள்ள டிஜிற்றல் மயமாக்கல் செயல் முறையானது, நிலையானதாகவும், சுற்றாடலை அனுசரித்துச் செல்வதாகவும் இருப்பதுடன், இ-கழிவு முறையாக முகாமை செய்யப்படுதலும் வேண்டும்.

**கொள்கை விடயம் 17.1:** கணினியை மற்றும் சுற்றாடலுக்கு தீங்குவிளைவிக்கும் உபகரணத்தை அகற்றுதலானது நீண்ட காலப்போக்கில் பாரிய சுற்றாடல் பிரச்சினைக்கு இட்டுச்செல்ல முடியும்.

**கொள்கை 17.1:** டிஜிற்றல் கல்விச் செயல்முறையானது, சூழலுக்கு அனுசரணை யாகவும் மற்றும் நிலையாக மீள்சுழற்சி செய்யப்பட்ட அல்லது இயன்றளவு குறைந்தபட்ச சுற்றாடல்சார் தாக்கத்துடன் அகற்றப்பட்ட இ-கழிவு என்பதாக இருத்தல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வழிகாட்டலின் பேரில் இ.கழிவு மீள்சுழற்சிக்கான / அகற்றலுக்கான பொறிமுறையொன்றினை கொண்டிருத்தல்.

DRAFT

## 3.18 நோக்கம் 18: மென்பொருள் பயன்பாடு

ஒவ்வொரு பாடசாலையிலும், பல்கலைக்கழகத்திலும், உயர் கல்வி நிறுவகத்திலும் மற்றும் தொழில் பயிற்சி நிறுவகத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ள மென்பொருள், கற்றல் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் ஆகிய இரண்டும் பயன்படுத்துவதற்கு பயனுள்ளதாகவும், தொடர்புடையதாவும், இற்றைப்படுத்தப்பட்டதாகவும், உரிமம் பெற்றுள்ளதாகவும் இருத்தல். (திறந்த மூலப் பொருட்கள் இருந்தாலன்றி)

**கொள்கை விடயம் 18.1:** கல்வித் துறையில் பயன்படுத்தப்படுகின்ற மென்பொருள் எப்போதும் பயனுள்ளதாகவும், தொடர்புடையதாகவும், இற்றைப்படுத்தப் படுவதாகவும் அத்துடன் உரிமம் பெற்றதாகவும்/அதிகாரமளிக்கப்பட்டதாகவும் இருப்பதில்லை.

**கொள்கை 18.1:** கல்வித் துறையால் பயன்படுத்தப்பட்ட மென்பொருள், பயன்படுத்துவதற்கு பயனுள்ளதாகவும், தொடர்புடையதாகவும், இற்றைப் படுத்தப்பட்டதாகவும் அத்துடன் உரிமம் பெற்றதாகவும் / அதிகாரமளிக்கப் பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. கற்றல் மற்றும் நிருவாக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படவுள்ள மென்பொருளை அறிவுள்ள தனிநபர்களைக் கொண்ட குழுவொன்றினூடாக தெரிவு செய்தல்.
2. கற்கைநெறிகளுக்கான, பயன்பாட்டுக்கான (மேம்படுத்தப்பட்ட பதிப்புக்கள்) மற்றும் / அல்லது பயன்படுத்துவதற்கு உரிமம் பெற்ற / அதிகாரமளிக்கப் பட்ட அவற்றின் தொடர்பு முறைக்காக நிறுவப்பட்டுள்ள மென்பொருளை காலத்திற்கு காலம் கண்காணித்தல்.

## 3.19. நோக்கம்19: நிலைமாற்ற முயற்சிக்கான முன்னுரிமை

கல்வியை டிஜிற்றல் முறைமைக்கு மாற்றுகின்ற முயற்சியானது, தீர்மானம் எடுக்கின்ற செயல்முறையில் அது மிகவும் தகுதியானது என்று முதன்மை பெறுகின்றது; கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கொள்கையை நடைமுறைப் படுத்துபவர்கள் உள்ளடங்கலாக அனைத்து அதிகாரிகளும், அக்கறைதாரர்களும் கல்வியை டிஜிற்றல் மயப்படுத்தும் குறிக்கோள்களை அடைவதனை நோக்கிய அவர்களது பங்களிப்பினை தமது பிரதான கடமையாக கருதுதல் .

**கொள்கை விடயம் 19.1:** கல்வியை டிஜிற்றல் முறைமைக்கு மாற்றுதல் என்பதற்கு அதிகாரிகளாலும், அக்கறைதாரர்களாலும் அதற்கான உரிய அங்கீகாரம் எப்போதும் அளிக்கப்படுவதில்லை.

**கொள்கை 19.1:** கல்வியை டிஜிற்றல் முறைமைக்கு மாற்றுதலானது நடைமுறைப் படுத்துவதில் முன்னுரிமையளிக்கப்படுகின்ற தொன்றாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் :**

1. கல்வியை டிஜிற்றல் முறைமைக்கு மாற்றுவதை, கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கொள்கையை நடைமுறைப்படுத்துபவர்கள் உள்ளடங்கலாக அனைத்து அதிகாரிகளாலும், அக்கறைதாரர்களாலும் நடைமுறைப்படுத்து வதில் முன்னுரிமையளிக்கப் படுகின்றதொன்றாக அங்கீகரித்தல்.

DRAFT